# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,888—1970 ජනවාරි 9 වැනි සිකුරාදා—1970.1.9

14,888 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு சனவரி மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 17 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 20 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 18 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 10

எண். டி./வி.எவ்./17/எ. (V)

### தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகா தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்

மேற்குறித்த உத்தியோகத்தர் 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் தரைப்படையின் தொண்டர் படையில் இருந்து இளைப்பாறுகிறார் :

பிறெவெற் லெப்ரினன்ற்—கேணெல் நெவில் என்வீஸ் த சில்வா, ஈ.டி., சி.சி.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1969, திசெம்பர் 26.

1–281

1970 இன் இல. 11

எண். டி/விஎவ்/51

### தரைப்படை—இ. தொ. ப.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்ச்சி

1969 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் கப்ரின் (குவாட்டர் மாஸ்டர்) ஆகக் கடவர் :

லெப்ரினன்ற் (குவாட்டர் மாஸ்டர்) மகவிதானகே பியசேன குணவர்த்தன, ஜி. டபிள்யூ.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1969, திசெம்பர் 28.

1–308

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஸ்ரீ திசெம்பர் மீ 14 ந் உ.

1970 இன் இல. 12

எண். டி/விளப்/2/எ (III)

## தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதியவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணை அமர்வு துறத்தல்

கீழ்க்குறிக்கப்பட்ட அலுவலர் தரைப்படையின் இலங்கை தொண்டர் படையில் நின்றும் 1970 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் அரசாணை அமர்வில் இருந்து விலகிக் கொள்வதை அதி உத்தமராம் மகாதேசாதிபதியவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் :

" லெவ்ரினன்ற் " ஷா மிஹ்லார், சி. எல். ஐ.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1969, திசெம்பர் 28.

1–309

---

1970 இன் இல. 13

எண். டி. 22/ஆர்ஈசிரி/90

## இலங்கை அரச கடற்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கிகரிக்கப்பட்ட இளைப்பாறல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவல இலங்கைக அரச கடற்படையின் நிலையான கடற்படையிலிருந்து 1970, மார்ச்சு மாதம் 1 ஆம் திகதி இளைப்பாறு கிறார் :

" லெவ்ரினன்ற்–கொமான்டர் " பி. டி. நதானியெல்ஸ், இலங் அ.க.

1969, ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதிய 14,878 ஆம் எண்கொண்ட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 4ஆ. என்ற எண் கொண்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1969, திசெம்பர் 27.

1–310

---

# அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ. பீ. 12/68.

## 1968 ம் ஆண்டின் 14 ம் இலக்க உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சபைச் சட்டம்

### 4 (1) ஆம் பிரிவின்கீழான கட்டளை

1968 ம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சபைச் சட்டத்தின 4 (1) ஆம பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங் களைக் கொண்டு, இராசாங்க அமைச்சர் ஜூனியஸ் ரிச்சார்ட் ஜெயவர்த்தனு ஆகிய யான், காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சரின் ஒருப் பாட்டுடன் இதனுடைய அட்டவணையிற் குறிப்பிடப்பட்ட காணிகளை 1966 ஆம் ஆண்டிலை 10 ஆம் இலக்கச் சட்டத்தினுற் ருபிக்கப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனமான இலங்கை, உல்லாசப் பிரயாணச் சபைக்கு, சொல்லப் பட்ட உல்லாசப் பிரயாணச் சபையின் உல்லாசப் பிரயாண அபிவிருத்தி முயற்சி ஒன்றன் நோக்கத்துக்காக, இக்கட்டளையினுல் உரித்தாக்குகிறேன்.

ஜே. ஆர். ஜயவர்த்தனு,
இராசாங்க அமைச்சர்.

கொழும்பு,
1969 ம் ௵ திசெம்பர் ௴ 26 ந் வ.

### அட்டவணை

1. தென் மாகாணம், காலி மாவட்டம், வெள்ளவிற்ற கோறளை (மேற்கு), பென்தோட்ட கிராமாதிகாரி பிரிவில், பென்தோட்ட நகரசபை எல்லைக்குள் பகுருமுல்ல வட்டாரம் 1, மல்லகொட கிராமத்தில் அமைந் துள்ள, பி. பி. ஞ 108 இல் துண்டு 1 என் எடுத்துக் காட்டப்பட்டதும் காணி கொள்வனவுச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட 17.7.1968 எனத் தேதியிடப்பட்ட உரித்தாக்கற் கட்டளையுடன் இணைக்கப்பட்ட நில அளவை யாளர் தலைமையதிபதியினுல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 25.6.68 ஆம்தேதிய வி. 2760 எனக் குறிப்பிடப்பட்ட வரைபடத்தில் முழுமையாக விவரிக்கப் பட்டுள்ளதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் சிறி டி. வியனசூரியா வினுல் மிக அண்மையில் செய்யப்பட்ட 23.10.1969 எனத் தேதி யிடப்பட்ட 190 ஆம் இலக்க வரைபடத்தில் எடுத்துக்காட்டப்பட்டுமான பரப்பளவில் 0 ஏக்கர், 2 றூட், 23·7 பேர்ச் கொண்ட காணித்துண்டு.

எல்லை—

வடக்கு : பென்தோட்டை கங்கை ;
கிழக்கு : 2, 3, 4, 5, 8, 9 ஆகிய துண்டுகள் ;
தெற்கு : 12 வது துண்டு ;
மேற்கு : கடல்.

2. மேற் சொல்லப்பட்ட பகுருமுல்ல வட்டாரம் இல. 1, மலலகொட கிராமத்தில் அமைந்த, மேற்சொல்லப்பட்ட பி. பி. ஞ 108 இல் துண்டு 16 என எடுத்துக்காட்டப்பட்டதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் சிறி டி. வியனசூரியாவினுல் மிக அண்மையில் செய்யப்பட்ட 1969.10.23 எனத் தேதியிடப்பட்ட 191 ஆம் இலக்க வரைபடத்தில் எடுத்துக் காட்டப் பட்டதுமான பரப்பளவில் 1 ஏக்கர், 0 றூட், 39.3 பேர்ச் கொண்ட காணி துண்டு. எல்லை—

வடக்கு : 13 வது துண்டு ;
கிழக்கு : 15, 17, 18, 19, 20, 21, 22, 23, 24 ஆகிய துண்டுகள் ;
தெற்கு : 25 வது துண்டு ;
மேற்கு : கடல்.

3. மேற் சொல்லப்பட்ட பகுருமுல்ல வட்டாரம் இல. 1, மலலகொட கிராமத்தில் அமைந்த, மேற்சொல்லப்பட்ட பி. பி. ஞ 108 இல் துண்டு 26 என எடுத்துக் காட்டப்பட்டதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் சிறி டி. வியனசூரியாவினுல் மிக அண்மையில் செய்யப்பட்ட 1969.10.23 எனத் தேதியிடப்பட்ட 192 ஆம் இலக்க வரைபடத்தில் எடுத்துக் காட்டப் பட்டதுமான பரப்பளவில் 0 ஏக்கர், 2 றூட், 26·2 பேர்ச் கொண்ட காணித்துண்டு. எல்லை—

வடக்கு : 25 வது துண்டு ;
கிழக்கு : 27 வது துண்டு ;
தெற்கு : 145 வது துண்டு ;
மேற்கு : கடல்.

4. மேற் சொல்லப்பட்ட பகுருமுல்ல வட்டாரம் இல. 1, மலலகொட கிராமத்தில் அமைந்த, மேற்சொல்லப்பட்ட பி. பி. ஞ 108 இல் துண்டு 151 என எடுத்துக் காட்டப்பட்டதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் சிறி டி. வியனசூரியாவினுல் மிக அண்மையில் செய்யப்பட்ட 1969.10.23 எனத் தேதியிடப்பட்ட 193 ஆம் இலக்க வரைபடத்தில் எடுத்துக் காட்டப் பட்டதுமான பரப்பளவில் 1 ஏக்கர், 1 றூட், 00·5 பேர்ச் கொண்ட காணித்துண்டு. எல்லை—

வடக்கு : 26, 27 ஆகிய துண்டுகள் ;
கிழக்கு : 152 வது துண்டு ;
தெற்கு : 46 வது துண்டு ;
மேற்கு : கடல்.

5. மேற் சொல்லப்பட்ட பகுருமுல்ல வட்டாரம் இல. 1, மலலகொட கிராமத்தில் அமைந்த, மேற்சொல்லப்பட்ட பி. பி. ஞ 108 இல் துண்டு 149 என எடுத்துக் காட்டப்பட்டதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் சிறி டி. வியனசூரியாவினுல் மிக அண்மையில் செய்யப்பட்ட 1969.10.23 எனத் தேதியிடப்பட்ட 194 ஆம் இலக்க வரைபடத்தில் எடுத்துக் காட்டப் பட்டதுமான பரப்பளவில் 0 ஏக்கர், 0 றூட், 2·0 பேர்ச் கொண்ட காணித்துண்டு. எல்லை—

வடக்கு : 148 வது துண்டு ;
கிழக்கு : புகையிரதப் பாதைக்கான ஒதுக்கிடமும் 150 வது துண்டும் ;
தெற்கு : புகையிரதப்பாதைக்கான ஒதுக்கிடம் ;
மேற்கு : 148 வது துண்டு.

1–302

---

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

இறப்பர் வளர்த்தலும் உற்பத்தி செய்தலும் தொடர்பான தொழிற் சம்பளச் சபையில் நியமன உறுப்பினராயிருந்த அல்காஜ். எம். எச். எம். இரோயால் என்பவர் சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 12 (2) ம் பிரிவின் படி தாமாக விலகியதாகக் கருதப்பட்டமையால் அவருக்குப் பதிலாக திரு. நிகால் கனகரத்தின என்பவரை (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி கனம் தொழில், தொழில் வசதி அமைச்சர் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஜே. பீ. தம்பையா,
நிரந்தரச் செயலாளர்,
தொழில், தொழில் வசதி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ௵ திசெம்பர் ௴ 18 ந் வ.

1–238

## முத்திரைக் கட்டளைச் சட்டம்

### 2 ஆம் பிரிவின் கீழ் கட்டளை

1959 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான (247 ஆம் அதிகாரமாகிய) முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) துணைப் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதி அமைச்சர், உக்கு பண்டா வன்னிநாயக்க ஆகிய நான், ஏதாவது ஒரு அசைவற்ற சொத்தை மாற்றுவதற்கு தொடர்பான ஒப்பந்தப் பத்திரமொன்று இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாக, அல்லது சார்பாக அல்லது இலங்கை அரசாங்கத்தால் செயலாற்றும் நிலையில் இந்தியாவில் முத்திரை விதிப்பதற்கு முடியாதிருந்ததைப் பற்றி திருப்தியடைந்து,

(1) இக்கட்டளைச் சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மேற் குறிப்பிடப்பட்டுள்ள i ம் துணைப் பிரிவிற்காகிய காப்புவாசகத்தின் (ii) ம் பிரிவினால் வழங்கப்பட்ட விதிவிலக்கு, இந்தியா அரசாங்கத்திற்கு ஆதரவாக, அல்லது சார்பாக அல்லது இந்தியா அரசாங்கத்தால் செயலாற்றப்பட்ட ஏதாவது ஒரு ஒப்பந்தத்திற்கு தொடர்புடையதாக செய்வதற்கு இத்தால் வெளிப்படுத்துவதோடு,

(2) மேற் குறிப்பிட்ட பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட 1955 பெப்ருவரி 25 ஆம் திகதிய இல. 10,769 கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இந்தியாவிற்கு தொடர்பான கட்டளை மேற் குறிப்பிட்ட திகதியிலிருந்து இத்தால் நீக்கிவிடுகின்றேன்.

யூ. பி. வன்னிநாயக்க,
நிதி அமைச்சர்.

கொழும்பு, 1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 21 ந உ.

1–257

---

## 1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

### 49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சர் மஹாபாலகே தொன் ஹென்றி ஜய வர்த்தன ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக இத்துடன் இணைக்கப் பட்ட அட்டவணையில் விப்ரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப் படவேண்டும் என இதனால் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

எம். டீ. எச். ஜயவர்த்தன,
விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 27 ந உ.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பெ. இ. உ. பிரிவினுள்ளே அமைந்துள்ள, பம்பலப்பிட்டி, சிறப்பெரி தோட்டம் 20 ம், 21 ம் வரிமதிப்பு இலக்கங்களைக் கொண்ட, கிட்டத்தட்ட ஏ. 0, ரூ. 3, பே. 32·80 விஸ்தீரணமுள்ள காணித்துண்டு ஒன்று. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : சிறப்பெரி தோட்டம்;

கிழக்கு : அதே காணியின் கூறு எம்;

தெற்கு : 18 ம், 22 ம், 24 ம், 28 ம் வரிமதிப்பு இலக்கங்களைக் கொண்ட வளவுகள்.

மேற்கு : 35 ம் வரிமதிப்பு இலக்கம் கொண்ட வளவுகள்.

1–298

---

## 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்

1963 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 37 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டிருக் கும் தத்துவங்களைக் கொண்டு தேசியமய சேவைகள் அமைச்சர் வித்தான ஆராச்சிக்கே சுகததாசாவாகிய நான் 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் தேதிய 13,910 ஆம் இலக்க கசற்றிற் பிரசுரிக்கப்பட்டதும், மேற் கூறிய சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்டதுமான (74 ஆம் இலக்க) உரிமையாக்கற் கட்டளையை,

(அ) அக் கட்டளைக்கான அட்டவணையின் 61 ஆம் விடயத்திற் குறிக்கப்பட்டதும், இதற்கான அட்டவணையில் மேலும் முழு விவரமாகக் கூறப்பட்டுள்ளதுமான ஆதனத்திற்கும்,

(ஆ) மேற் கூறிய ஆதனத்தில் நிற்கும் கட்டிடங்கள் எல்லாவற்றிற்கும்,

அக் கட்டளை தொடர்புடையதாயிருக்கும் அளவிற்கு இக் கட்டளை மூலம் நீக்கஞ் செய்கிறேன்.

வீ. ஏ. சுகததாச,
தேசியமய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 18 ந உ.

### அட்டவணை

61. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் குருநாகல் மாநகர சங்க வெல்லைக்குள் கண்டி வீதியில் உள்ளதும், (அதே) கண்டி வீதியில் 74 ஆம் மதிப்பீட்டிலக்கம் கொண்டதும், இதன்பின் தொடர்புறுத்தப்படும் 5603 " ஏ " இலக்கத் திட்டப்படத்தில் கூறு " பி " யினால் குறிப்பிடப்பட்டுள்ளதும் வடக்கில் அதே காணியின் கூறு " ஏ " யினாலும், கிழக்கில் கண்டி வீதியினாலும், தெற்கில் அதே காணியின் ஒரு பகுதியாகிய முப்பத்திமூன்று அடி அகலங்கொண்ட வீதியினாலும், மேற்கில் அதே காணியின் எஞ்சியுள்ள பகுதியின் 72/1 ஆம் மதிப்பீட்டிலக்கம் கொண்ட காணியினாலும், எல்லையிடப்பட்டுள்ளதும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. ஏ. டி. சில்வாவினால் வரையப்பட்டு, 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆந் தேதி இடப்பட்ட, 5603 " ஏ " இலக்கத் திட்டப்படத்தின்படி வெறுமை ஏக்கர், வெறுமை றூட், இருபத்திரண்டு தசம் ஆறு ஒன்று பேர்ச் (0 ஏ. 0 றூ. 22·61 பேர்ச்) பரப்புடையதுமான காணித்துண்டடங்கலும்.

(ஷெல்—கண்டி வீதி, குருநாகல்).

(எல்வ/பி/275).
(டி.வி.ஓ—155).

1–268

---

## 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்

1963 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 37 ஆம் பி விவினால் எனக்குரித்தாக்கப்பட்டிருக் கும் தத்துவங்களைக் கொண்டு தேசியமய சேவைகள் அமைச்சர் வித்தான ஆராச்சிக்கே சுகததாசாவாகிய நான் 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் தேதிய 13,910 ஆம் இலக்க கசற்றிற் பிரசுரிக்கப்பட்டதும், மேற் கூறிய சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்டதுமான (74 ஆம் இலக்க) உரிமையாக்கற் கட்டளையை,

(அ) அக் கட்டளைக்கான அட்டவணையின் 71 ஆம் விடயத்திற் குறிக்கப் பட்டதும், இதற்கான அட்டவணையில் மேலும் முழு விவர மாகக் கூறப்பட்டுள்ளதுமான ஆதனத்திற்கும்,

(ஆ) மேற் கூறிய ஆதனத்தில் நிற்கும் கட்டிடங்கள் எல்லாவற்றிற் கும்,

அக்கட்டளை தொடர்புடையதாயிருக்கும் அளவிற்கு இக் கட்டளை மூலம் நீக்கஞ் செய்கிறேன்.

வீ. ஏ. சுகததாசா,
தேசியமய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ந் தேதி.

### அட்டவணை

71. சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் கீழ் புலத்கம கோறலேயில் உள்ளதும், டெடிகம்பலவின் மொகொடபொத பத்துவில் உள்ள யட்டியந்தோட்டையின் பிரதான வீதியில் 109 ஆம் மதிப் பீட்டிலக்கம் கொண்டதும், இதன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் 248 ஆம் இலக்கத் திட்டப்படத்தில் கூறு நான்கினால் குறிப்பிடப்பட்டுள்ளதும், வடக்கில் இதே காணியின் ஒரு பகுதியினாலும் (கரப்பந்தாட்ட மைதானம்), கிழக்கில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள திட்டப்படத்தில் முதலாம், இரண்டாம் கூறுகளினாலும், தெற்கில் திருவாளர்கள் எம். பி. கோமெஸ்சும் கம்பெனியாளர்களுக்கும் சொந்தமான வளவுகளினாலும், மேற்கில் குறிப்பிடப்பட்டுள்ள நெகட்டிகெற என்ற காணியின் எஞ்சியுள்ள பாகத்தினாலும், எல்லையிடப்பட்டுள்ளதும், உத்தரவு பெற்ற நில அளவை யாளர் டபிள்யூ. எம். பெரேராவினால் வரையப்பட்டு 1956 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ஆந் தேதி இடப்பட்ட 248 ஆம் இலக்கத் திட்டப்படத்தின் படி வெறுமை ஏக்கர், வெறுமை றூட், ஒன்பது தசம் நான்கு ஏழு பேர்ச் (0 ஏ., 0 றூ., 9.47 பேர்ச்) பரப்புடையதுமான காணித்துண்டடங் கலும்.

மேலே கூறிய யட்டியாந்தொட்டையின் பிரதான வீதியில் 109 ஆம் மதிப்பீட்டிலக்கம் கொண்டதும், இதனடியில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டப் படத்தில் கூறு இரண்டினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதும், வடக்கில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள திட்டப்படத்தின் கூறு ஒன்றினாலும், கிழக்கில் இங்கு குறிப்பிட்ட திட்டப்படத்தின் கூறு மூன்று உட்பட கொழும்பு–கட்டன் பிரதான வீதியினாலும், தெற்கில் திருவாளர்கள் எம். பி. கோமெஸ் சம் கொம்பனியாரின் வளவுகளினாலும், மேற்கில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டப்படத்தின் கூறு நான்கினால் எல்லையிடப்பட்டுள்ளதும், உத்தரவு பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எம். பெரேராவினால் வரையப்பட்டு 1956 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இருபத்தியாறாந் தேதி இடப்பட்ட 248 ஆம் இலக்கத் திட்டப்படத்தின்படி வெறுமை ஏக்கர், வெறுமை றூட் ஆறு தசம் எட்டு ஐந்து பேர்ச் (0 ஏ. 0 றூ. 6.85 பேர்ச்) பரப்புடையது மான காணித்துண்டடங்கலும்.

சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் கீழ் புலத்கம கோறலேயில் உள்ளதும் டெகிகம்பலவின் மெகொடபொத பத்துவில் உள்ள யட்டியாந்தோட்டையின் பிரதான வீதியில் 109 ஆம் மதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளின் ஒரு பகுதி கொண்டதும் இதன் அடியில் குறி பிடப்பட்டிருக்கும் 74 ஆம் இலக்கத் திட்டப்படத்தின் கூறு " ஏ " யினால் குறிப்பிடப்பட்டுள்ளதும், வடக்கில் காலி மேற்றிராணியாருக்குச் சொந்த மான காணியினாலும், கிழக்கில் கட்டன்–கொழும்பு பிரதான வீதியினா லும், தெற்கில் நில அளவையாளர் ப. ஜே. தியோ டி மெல் இனால் வரையப்பட்டு 1928 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தேதி கொண்ட 2041 ஆம் இலக்கத் திட்டப்படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள நெகதிகே கென என்ற காணியின் கூறு " பி " இனாலும், மேற்கில் அதே காணியின் ஒரு பகுதியினாலும், எல்லையிடப்பட்டுள்ளதும், உத்தரவு பெற்ற நில அளவையாளரும் மட்டம் பார்ப்போருமாகிய சி. எச். பேட் இனால் வரையப் பட்டு 1954 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆந் தேதி இடப்பட்டதும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதுமாகிய 74 ஆம் இலக்கத் திட்டப்படத்தின்படி வெறுமை ஏக்கர், வெறுமை றூட், ஐந்து தசம் ஆறு ஆறு பேர்ச் (0 ஏ., 0 றூ., 5.66 பேர்ச்) பரப்புடையதுமான நெதற்கெகென என்ற ழைக்கப்படும் காணித்துண்டடங்கலும்.

(ஷெல்–யட்டியந்தோட்ட)

(எல். ஏ/பி/316)
(டி. வி. ஓ.–149)

1–269

## 1961 ஆம் ஆண்டிம் 28 ஆம் இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்

1963 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 37 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டிருக் கும் தத்துவங்களைக் கொண்டு, தேசியமய சேவைகள் அமைச்சர், வித்தான ஆராச்சிகே சுகததாசாவாகிய நான், 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதிய 13,050 ஆம் இலக்க கசற்றிற் பிரசுரிக்கப்பட்டதும், மேற் கூறிய சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்டதுமான (19 ஆம் இலக்க) உரிமையாக்கற் கட்டளையை,

(அ) அக் கட்டளைக்கான அட்டவணையின் 15 ஆம் விடயத்திற் குறிக்கப்பட்டதும், இதற்கான அட்டவணையில் மேலும் முழு விவரமாகக் கூறப்பட்டுள்ளதுமான ஆதனத்திற்கும் ;

(ஆ) மேற் கூறிய ஆதனத்தில் நிற்கும் கட்டிடங்கள் எல்லாவற்றிற்கும் அக்கட்டளை தொடர்புடையதாயிருக்கும் அளவிற்கு இக்கட்டளை மூலம் நீக்கஞ் செய்கிறேன்.

வீ. ஏ. சுகததாச,
தேசியமய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 18 ந உ.

### அட்டவணை

15. மேல்மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் அதன் மாநகர சங்க எல்லைக்குள் வடக்கு ஸ்கினேஸ் வீதிக்கும் புளுமெண்டல் வீதிக்கும், கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டாரத்திற்கும் இடையில் உள்ளது 353 ஆம் மதிப்பீட்டிலக்கம் கொண்டதுவும், வடக்கில் சொல்லப்பட்ட 773 " ஏ " இலக்கத் திட்டப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூறு " ஏ " மூன்றினாலும், வடக்கு ஸ்கினேஸ் வீதியில் 355 ஆம் இலக்கங் கொண்ட வளவினாலும், மேற்கில் வடக்கு ஸ்கினேஸ் வீதியினாலும் எல்லையிடப் பட்டுள்ளதும், வெறுமை ஏக்கர், இரண்டு றூட், பத்துடன் ஏழின் கீழ்ப்பத்துப் பேர்ச் (0 ஏ. 2 றூ. 10 7/10 பேர்ச்) பரப்புடையதும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. அதுறலியேயினால் வரையப்பட்டு 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பத்தாந் தேதி இடப்பட்ட 773 " ஏ " இலக்கத் திட்டப்படத்தில் கூறு " ஏ " இரண்டினால் குறிப்பிடப்பட்டுள்ள இகொட வத்தே வளவு அல்லது " கிறீன் லொட்ச் " என்ற காணியில் இருந்து பிரித்து வரையறுத்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டடங்கலும்.

(எஸ்ஸோ—வடக்கு ஸ்கினேஸ் வீதி).

(எல்.ஏ/சி/89).
(டி.வி.ஓ—156).

1–270

## 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச்சட்டம்

### பிரிவு 38 ஆ (1) ன் கீழான கட்டளை

1958 ம் ஆண்டின் 30 ம் இலக்கச் சட்டத்தினாலும், 1961 ம் ஆண்டின் 61 ம் இலக்கச் சட்டத்தினாலும், 1964 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சட்டத்தினாலும், 1966 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்ட, 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் 38 ஆ பிரிவின் (1) ம் உட்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழிற் சேவை ஆணையாளர், செனவிரட்ன பண்டா செனாயக்கா ஆகிய நான், குருநாகல் மாவட்டத் திலுள்ள இடம்படெனி கதப்பத்துவ பெரும்பாக இறைவரி உத்தியோகத் தரின் பகுதியில் அமைந்திருக்கும் 87/23 ம் இலக்க இயக்கவிற்ற பயிர்ச்செய்கைக்குழுவின் துர்நடத்தை, தகுதியீனம், துர்நிர்வாகம், வேண்டுமென்று அலட்சியம் செய்தல்பற்றி போதிய அத்தாட்சியுள ளதெனத் திருப்தி அடைந்ததின்பேரில், சொல்லப்பட்ட பயிர்ச்செய்கைக் குழுவை இக்கட்டளையினால் குலைக்கின்றேன்.

செ. ப. செனாயக்கா,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

கமத்தொழிற் சேவை இலாகா,
த. பெ. இல. 537,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 20 ந உ.

1–274/1

## 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம்

### பிரிவு 38 ஆ (2) ன் கீழான கட்டளை

குருநாகல் மாவட்டத்திலுள்ள இடம்படெனி கதப்பத்துவ பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பகுதியில் அமைந்திருக்கும் 87/23 ம் இலக்க இயக்கவிற்ற பயிர்ச்செய்கைக் குழுவின் நியாயாதிக்க எல்லைக்குள், 1958 ம் ஆண்டின் 30 ம் இலக்கச் சட்டத்தினாலும், 1961 ம் ஆண்டின் 61 ம் இலக்கச் சட்டத்தினாலும், 1964 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சட்டத்தினாலும், 1966 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தினாலும், திருத்தப்பட்டபடியான 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக் குழுவொன்றிற்குள்ள தத்துவங்கள், கடமைகள், பணிகள் எல்லாவற்றையும் பிரயோகிக்கவும், புரியவும், செய்யவும் கமத்தொழிற் சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. மிகிந்த குலசூரிய லெஸ்லி சத்துர்நியாஸ் பெரேரா தர்மரட்னவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

செ. ப. செனாயக்கா,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

கமத்தொழிற் சேவை இலாகா,
த.பெ. இல. 537,
கொழும்பு 7.
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 26 ந உ.

1–274/2

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொம்பனிகள் கட்டளைச் சட்டம்

### (145 ம் அத்தியாயம்)

கொலொன்ன டிரான்ஸ்போட் கொம்பனி லிமிடட் ஐ 227 (4) ம் பிரிவின் கீழ் குலேத்தற்கான அறிவித்தல்.

அடிங் அங்கத்தவர்கள் தாமாக கணக்கு முடித்துக் குலேத்தல்.

குலேவில் இருக்கும் கொலொன்ன டிரான்ஸ்போட் கொம்பனி லிமிடட் இன்னும் இறுதிக் கணக்கு முடித்தற் கூட்ட விபரத்திரட்டு, குலேத்தற் கருமாதிகாரியின் ஓர் கணக்குப் பிரதியுடன் கிடைக்கப்பெற்று 1969 திசெம்பர் 26 ந் திகதி பதிவு செய்யப்பட்டிருப்பதால், அத்திகதியிலிருந்து மூன்று மாதங்களின் முடிவில் கொலொன்ன டிரான்ஸ்போட் கொம்பனி லிமிடட் கொம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அதிகாரம்) 227 (4) ம் பிரிவின் கீழுள்ள ஏற்பாடுகளுக்கமைய குலேக்கப்பட்டதாக கருதப்படுமென இத்தால் அறிவீராக.

ஜே. எவ். பொன்னம்பலம்,
கொம்பனிகள் பதிவாளர்.

கொழும்பு, 1969 திசெம்பர் 29.

1–312

## இலங்கை அரச ஈட்டு வங்கி

### இலங்கை அரச ஈட்டு வங்கி
### கட்டளைச் சட்டம் (அதி. 398)

இலங்கை அரச ஈட்டு வங்கிக் கட்டளைச் சட்டம் (அதி. 398) இன் 93 (1) (ஈ) பிரிவின் கீழ், பின்வரும் விதியை இயக்குநர் சபை ஆக்கிப் பொதுச் செய்தியாக இத்தால் வெளியிடுகின்றது.

இயக்குநர் சபையின் கட்டளைப்படி,

எச். பி. கப்புவத்த,
பொது முகாமையாளர்.

கொழும்பு, 1969 ம் ஆடு நவம்பர் மீ ந உ.

இலங்கை அரச ஈட்டு வங்கிக் கட்டளைச் சட்டம் (அதி. 398) இன் 93 (1)(ஈ) பிரிவின் கீழுள்ள 1 ம், 2 ம் விதிகள் இத்தால் விலக்கப்பட்டு பதிலாக பின்வரும் விதி சேர்க்கப்பட்டுள்ளது.

" தவணைப்பணத்தையும் வட்டியையும் அல்லது சமமான தவணைப் பணத்தையும் அல்லது வேறு வகைக் கட்டணங்களையும் அவ்வவ்வகைகளின்படி செலுத்தத்தவறும் கடனாளிகள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்ட கடனின் நிமித்தம், கடன் பாதுகாப்புச் சாதனத்தின் உடன்பாட்டின்படி செலுத்த வேண்டிய அத்தகைய தவணைப் பணத்தோடும் வட்டியோடும் அல்லது சமமான தவணைப்பணத்தோடும் அல்லது வேறு வகைக்கட்டணங்களோடும், வருடமொன்றுக்கு மிகுந்திருக்கும் முதலில் ஒரு சதவீத வட்டியுடன், பணம் செலுத்தப்பட வேண்டிய திகதி முதற்கொண்டு பணம் செலுத்தப்படும் வரையிலுள்ள கால, தண்டனை வட்டித் தொகையை மேலதிகமாகச் செலுத்த வேண்டும் என்ற கட்டுப்பாட்டின் கீழ், உடன் பட்ட கட்டணத்தை ஒரு முறைக்கு மேல் கட்டத்தவறிய கடனாளிக்கு, உடன்பட்ட தொகையை ஒரு முறை செலுத்த எடுக்கும் காலம் தவிர்க்கப்பட்டு அதன் பின்வரும் கட்டணங்களுக்கு தண்டனை வட்டி கணிக்கப்படும்.

1-393

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | 2.1.70 | வெள்ளி | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.1.70 | வெள்ளி | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.1.70 | வெள்ளி | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 23.1.70 | வெள்ளி | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 29.1.70 | வியாழன் | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி | 5.2.70 | வியாழன் | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| மாச்சு | 5.3.70 | வியாழன் | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.

**எல் டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.